பாடம் 3

# ஓடும் ஆற்றைக் கடந்து செல்தல்

*புதிதாக நிகழப்போகும் மிகஅருமையான நிகழ்வு ஒன்றை நீ காணப்போகிறாய் என்று வைத்துக்கொள். அன்றைய காலை வேளையில் நீ கண்விழிக்கும்போது உனக்கு எவ்வளவு பரபரப்பாக இருக்கும்? அதுவும் இதுவரையிலும் நடைபெறாத ஒரு நிகழ்வென்றால் சற்று நடுக்கமாகக்கூட இருக்கும் அல்லவா? இன்றைய பாடத்தைப் பார்.*

முரட்டாட்டமும், கலகக்குணமும் உடையவர்களாக இஸ்ரவேலர் செயல்பட்டபோதும், அவர்களுக்கு தேவன் அளவில்லாமல் நன்மை செய்திருந்தார். அவர்கள்மேல் தேவ அன்பு வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது.

அற்புதமாக செங்கடலைக் கடந்து எகிப்திலிருந்து தேவன் அவர்களை மீட்டு வந்திருந்தார். நித்தமும் தவறாது உணவை வழங்கினார். அதுவும் சிறப்பாக தமது தூதர்கள் உண்ணும் உணவையே கொடுத்தார். சீகோன், ஓக் எனும் அரசர்களை வெல்ல உதவி செய்திருந்தார்.

மோசேயை அவர்களது தலைவராகத் தந்து, அருமையாக இதுவரையிலும் வழிநடத்தி வந்திருந்தார். இப்போது தலைவராக இருக்கும் யோசுவாவும், மோசேயைப் போன்று பக்தியான ஓர் ஊழியர்தான். இஸ்ரவேலரை நேசிக்கும் தேவனுடைய அன்பின் செயல்களுக்கு அளவே இல்லாதிருந்தது.

அப்போது அறுப்புக் காலம்; எனவே யோர்தானில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. யோர்தானுக்கு அடுத்த பக்கத்தில் தான் இஸ்ரவேலருக்கு தேவன் வாக்குப்பண்ணிய கானான் தேசம் இருந்தது.

“நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார். எனவே உங்களைப் பரிசுத்தம்பண்ணிக்



## மனன வசனம்

**கர்த்தர் உங்கள் நடுவிலே**
**அற்புதங்களைச் செய்வார்.**
**யோசுவா 3:5.**

கொள்ளுங்கள் என்று யோசுவா மக்களிடம் சொல்லியிருந்தார். மக்களும் அவ்வாறே ஆயத்த மாய் இருந்தனர்.

அதுவுமன்றி ஆசாரியர் களிடம் என்ன சொல்லவேண் டும் என்பதையும் தேவனே தம் ஊழியக்காரனாகிய யோசுவா விடம் சொல்லியிருந்தார். கர்த்தர் யோசுவாவை நோக்கி, "நான் மோசேயோடே இருந் ததுபோல, உன்னோடும் இருக் கிறேன்" என்றார். இதை இஸ்ர வேலர் எல்லாரும் அறியும் படிக்கு நான் இன்று உன்னை அவர்கள்முன் மேன்மைப் படுத்துவேன். உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர் தண்ணீர் ஓரத்திற்கு வந்தவுடன் யோர்தானில் நில்லுங்கள் என்று சொல். அதன்பின் நான் சொல் லியபடியே செய்" என்றார்.

யோசுவா ஆசாரியர்களை அழைத்தார். தேவன் தன்னிடம் சொன்னபடி, அவர்கள் செய்ய வேண்டியதைச் சொன்னார்.

அவர்கள் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை மிகுந்த பயபக்தியோடே தோளில் சுமந்துகொண்டிருந் தனர். ஜனங்களுக்கு முன்னாக ஆசாரியர்கள் உடன்படிக்கைக் பெட்டியைச் சுமந்துகொண்டு யோர்தான் ஆற்றை நோக்கி நடந்தார்கள். ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடன் ஓர் அதிசயம் நடந்தது.

தண்ணீர் இருபுறமும் குவியலாகக் குவிந்து நின்றது; நடுவிலே தண்ணீர் இல்லாத தரையாயிற்று. ஆசாரியர்களின் பின்னாக நடந்து வந்த ஜனங் கள், ஆச்சரியமடைந்து தேவனைத் துதித்தார்கள்.

யோர்தானின் நடுவிலே தண்ணீர் இல்லாத தரையிலே



## செய்தி

**தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய தேவன் நமக்கு தலைவர்களைத் தருகிறார்.**

ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைத் தோளில் சுமந்த வாறு நின்றார்கள். அப்போது ஜனங்கள் எல்லாரும் தண்ணீ ரற்ற உலர்ந்த தரை வழியாய்க் கடந்துபோனார்கள்.

இவ்வாறாக ஜனங்கள் யோர்தானைக் கடந்தார்கள். மக்கள் சந்தோஷமாக தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

மோசேயோடு இருந்த தேவன் யோசுவாவோடும் இருந்து இஸ்ரவேலரை வழிநடத்தினார். யோசுவாவும் மோசேயைப் போன்று தேவ னையே சார்ந்து செயல்பட்டார்.

என் கண்ணே! நீயும் தேவனையே சார்ந்திரு. அப்போது தேவன் உங்களோடு இருப்பார். நீங்கள் எதைச் செய்தாலும் அது வெற்றியாக அமையும். உங்கள் வாழ்க் கையில் மகிழ்ச்சி புரண் டோடும்.

**செய்முறை:** *கோடிட்ட இடங்களில் மாறிக்கிடக்கும் எழுத்துகளை ஒழுங்காக்கு. சரியான சொல்லை, வாக்கியத்திலுள்ள சரியான கோட்டில் எழுது.*

**சுவாயோ** – ________

**சேமோ** – ________

**ன்வதே** – ________

___ ___ ___ ___ ___ **யோடே**

**இருந்ததுபோலவே**

___ ___ ___ **வோடும்**

**இருந்தார்.**

**புதிர் 3**